Registered as a News Paper in Ceylon

விலை சதம் 15

**முக்கிய அறிவித்தல்**

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு
திருக்கேதீஸ்வர ஆலய வீதியில்
அமைந்திருக்கும் எமது விளம்பர
வாகனத்தில் 1-50 சதம் கொடுத்து
1 கப் அண்ணா கோப்பி
வாங்கும் அன்பர்களுக்கு
1 பொலிதின் பாக்
1 பக்கட் அண்ணா பற்பொடி
1 கலண்டர்
இனாமாக வழங்கப்படும்;

**அண்ணா தொழிற்சாலை**
**இணுவில்**

# ஈழநாடு

EELANADU

தேசிய தினசரி

**ஓர்**
**அரிய சந்தர்ப்பம்**

திருக்கேதீஸ்வர ஆலய வீதியில்
அமைந்திருக்கும் எமது

**மில்க்வைற் சோப்**

விளம்பரக் காட்சிச்சாலையில் சோப்
வாங்கும் அன்பர்களுக்கு 'சிவபுரா
ணம்', 'மகாசிவராத்திரி வரலாறு'
ஆகிய இரு நூல்களும் வேறு பல
இனாம் பொருட்களும் கொடுக்கப்
படும்.

மலர் 13 மாசி 11 ஜுஹுஜ் 26 (23—2—71) செவ்வாய்க்கிழமை இதழ் 14

# தமிழரசார் கோரிக்கைக்கு மாறுபட்ட சமஷ்டி அமைப்பு

## காங்கேசன், காலி, திருமலை துறைமுகங்கள் விருத்தி

### அமைச்சர் கலுகல்லை விளக்கம்

காலி, திங்கள்

"துறைமுகங்கள் தான் இந்த நாட்டின் முதுகெலும்பாகும் இந்நாட்டிலுள்ள முக்கியதுறைமுகங்களை அபிவிருத்திசெய்வதே மக்கள் அரசாங்கத்தின் கொள்கையும், தீர்மானமுமாகும்' காலி திருமலை, காங்கேசன் துறை துறைமுகங்களில் ஏற்கனவே அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன."

காலித்துறைமுகத்திற்கு உத்தியோக பூர்வமாக முதல் தடவை விஜயம் செய்த செய்த கப்பல்போக்குவரத்து அமைச்சர் திரு. பி. வி. ஜி. கலுகலை மேற்கொண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் காலித் துறைமுகத்தையும், மீன்பிடி துறைமுகத்தையும், நேரில் பார்வையிட்டார்.

துறைமுககாரியாலயத்திற்கும், துறைமுக கூட்டுஸ்தாபன காரியாலத்திற்கும், சென்றஅமைச்சர் அங்குள்ள ஊழியர்களை நேரில்சந்தித்து உரையாடினார்.

காலிதுறைமுக தொழிற்சங்க பிரதிநிதிகள் மத்தியில் அமைச்சர்கலு கல்லேமேலும் கூறியதாவது! இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தி எங்கள் துறைமுகங்களிலதான் தங்கியிருக்கிறது அதனால் துறைமுகங்களை திட்டத்தின்படி அபிவிருத்தி செய்வோம். ஏற்கனவே காலி, திருமலை, காங்கேசன்துறை துறைமுகங்களில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தநாட்டின் எதிர்கால நன்மையைகருதி தொழிலாளர்கள் தங்கள் கடமையைச் செய்ய தொழிற்சங்க தலைவர்கள் அவர்களை வழி நடத்தவேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

ஒழுங்காக வேலைகள் நடைபெறுவதற்கு கூட்டுஸ்தாபன உத்தியோகத்தர்களுக்கும் தொழிலாளருக்குமிடையில் ஒற்றுமை இருக்கவேண்டும் என அமைச்சர் வற்புறுத்தினார்.

அமைச்சருடன் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. வி. கரண்டாவல, சிரேஷ்ட உதவி செயலாளர் திரு. வின்சன்ட் பண்டித திரு. எட்கிகுணவர்த்தன, பிரதம பொறியியலாளர் திரு. எல். எஸ். டி. சில்வா. காலி மேயர் திரு. விஜயகுலசூரியாவும், வந்திருந்தனர்.

## அரசியல் அமைப்புக்குழு பரிசீலனை செய்கிறதாம்

[ நமது நிருபர் கே. ஜி. நவரத்தின ]

கொழும்பு, திங்கள்

தமிழரசுக்கட்சியினர் கோரும் சமஷ்டி அமைப்பைவிட தனியான வேறுவிதமான சமஷ்டி முறையைப் புதிய அரசியல் அமைப்பில்உருவாக்குவது பற்றிய யோசனை ஒன்றை புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமான வழிகாட்டு விசயாலோசனைக்குழுமுன் பரிசிலனை செய்யப்பட்டு வருவதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இப்புதிய யோசனையின்படி கொழும்பு நகரும் அதைச்சூழ்ந்த சில பகுதிகளும் விசேஷ மத்திய அரசாங்கப் பிரதேசங்களாக விளங்குமாம் அதாவது அமெரிக்காவின்தலைநகரான வாஷிங்டனும் அதைச் சூழ்ந்த பகுதிகளும்கொலம்பியா மாநிலத்திலிருந்து வேறுபட்டுத்தனிப்பிரிவாக இருப்பதுபோலவும் இதரபகுதிகளை ஐந்தோ அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேசங்களாக பிரிப்பதாகவும் புதிய திட்டம் ஆராயப்பட்டு வருகிறதாம். ஆனல் இப்புதிய சமஷ்டிமுறை சமஷ்டிக்கட்சியினரின் கோரிக்கையின் அடிப்படையில் அமையவில்லையாம்.

இப்படியொரு சமஷ்டி அமைப்பு பற்றி யோசனை இருப்பதை அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஒப்புக் கொண்டுள்ளாரெனினும் அதுபற்றி விரிவாக எதையும் தெரிவிப்பதற்கு அவர் மறுத்துவிட்டார். (சிபிஏ)

## 13 லட்சம் தேயிலைப்பெட்டி இறக்குமதி

கோட்டை, திங்கள்

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தம் ஒன்றை அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டதற்கிணங்க முதன் முதலாக 13 லட்சம் தேயிலைப் பெட்டிகளை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளம் இதற்கான செலவு 60 லட்சம் ரூபாவாகும் இவ்வருடத்தில் மொத்தம் ஒரு கோடி 60 லட்சம் ரூபா பெறுமதியான பெட்டிகளை இறக்குமதி செய்ய கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது.

## சிறுதீவில் 12 மூடை அரிசி கண்டு பிடிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திற்கு அருகாமையிலுள்ள சிறுதீவில 12 மூடை மிள்சாட் அரிசியை குருநகர் பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர். அரிசிபதுக்கல் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குருநகர் பொலிஸார் சந்தேக நபர்களையும் அரிசி மூடைகளையும் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைத்தனர்.

சுங்கப்பகுதி அதிகாரி அரிசி மூடைகளை பறிமுதல் செய்து சந்தேக நபர்கள் இருவருக்கும் 750 ரூபா அபராதம் விதித்தார்

சிறுதீவில் அரிசி மூடைகள் நிலத்திற்குள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் சந்தேகப்படுகின்றனர். இதைத் தொடர்ந்து பொலிஸார் கண்காணிப்பு அதிகரிக்கப்படுள்ளது.

## சமூககுறைபாடுகள்சட்டத் திருத்தம் நிறைவேறியது

கோட்டை, திங்கள்

சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டதிருத்தமசோதா இன்று வாக்கெடுப்பின்றி ஏகமனதாக ஆட்சிமன்றத்தில் நிறைவேறியது.

சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை மீறுவோருக்கு கூடிய தண்டனை வழங்கக் கூடிய விதத்தில் திருத்த மசோதாவில் வழிசெய்யப்பட்டிருக்கிறது

வழிபடுவோரைத் தடைசெய்வதற்காக வேலியோ அன்றித் தடையோ போடப்பட்டிருந்தால் அவற்றை அகற்ற பொலிஸாருக்கு அதிகாரம் வழங்குகிறது இம் மசோதா,

ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இம் மசோதாவின் படி சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை மீறுவேருக்கு 3 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும் மூவாயிரம் ரூபாய் அபரதமும் விதிக்கப்படும்.

வியாபார நிலையங்களைப் பொறுத்தவரையில்அனுமதி மறுக்கப்பட்டால் வியாபார லைசென்ஸ் ரத்துச் செய்யவும் இம் மசோதா வழிவகுக்கிறது.

### கூடிய அதிகாரம்

உதவி நீதிஅமைச்சர் திரு. ரத்தினசிறி விக்கிரமநாயக்கா பேசுகையில் "பழைய சட்டப்படி சமூககுறைபாடுகள்ஒழிப்புச்சட்டத்தை மீறுவோர் மீது பொலிஸாருக்கு வழக்குத் தாக்கல் செய்யமட்டும் அதிகாரம் இருந்தது ஆனல்இப்போது பொலிஸாருக்கு கைது செய்யவும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்குகிறது இம் மசோதா" என்று கூறினர்:

எதிர்க்கட்சித்தலைவர் திரு ஜே. ஆர் ஜயவர்த்தன இந்தத் திருத்தத்தை ஓர் அரசியல் பிரச்னையாகக் கருதக்கூடாதென்றும்இந்தத்திருத்தச் சட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றியமைக்காக அரசைப்பாராட்டுவதாகவும் சகலரும் ஒத்துழைப்புவழங்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

தென் மாகாணத்தில்

## சேகுவேரா இயக்கத்தினர் இருமடங்காக அதிகரிப்பு

கொழும்பு, திங்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களை தவிர்ந்த மற்றும் ஏழு மாகாணங்களில் சேகுவேரா இயக்கத்தினர் தொகை இருமடங்காக அதிகரித்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

கடந்த சில மாதங்களாக 11,000 ஆக இருந்த சேகுவேராஇயக்கத்தினரின் உறுப்பினர் தொகை 20,000 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்

இவ்வியக்கத்தினர் தீவிரமாகவும் துணிச்சலாகவும் செயலாற்றுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல இடங்களில் இவ்வியக்கத்தினர் துப்பாக்கிகளை திருடியுள்ளதாக இரகசிய பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

தொலை போசி மூலமும், கடிதங்கள் மூலமும் இரகசிய பொலிஸாருக்கு எச்சரிக்கை கிடைத்து வருவதாக கூறப்படுகிறது.

## பயணமானர்

சுழிபுரம் ஞாயிறு

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுக் காலை விமான மூலம் சென்னைக்கு பயணமானர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நள்ளிரவு
1-30 க்கு காட்சியுண்டு
**வெலிங்டன் சினிமா**
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்-சாரதா
நடித்த
**துலாபாரம்**
(தமிழ்)

இன்று நள்ளிரவு
1-30க்கு காட்சியுண்டு
சுன்னாகம்
**நாகம்ஸ் சினிமா**
தினசரி 3 காட்சிகள்
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம்.ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
**நாடோடி**

இன்று நள்ளிரவு 1-30 க்கு காட்சியுண்டு
**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

இன்று நள்ளிரவு 1-30 க்கு காட்சியுண்டு
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.- பி.எஸ்.சரோஜா
வீரப்பா
நடித்த
**ஜெனேவா** புதிய கொப்பி

6-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)
**சிவாஜி**
**காஞ்சனா**
எம். என்.
நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





**சிவந்த மண்**


## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 23—2—71**

(செய்திகள்: காலை 6-45 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 சித்திரம்.

844 மீ. அன்ட் 49 மீ.

9-50 குறளிசை, 10-30 கல்விச்சேவை, 11-15 குறவிசை.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 நாட்டுப்பாடல்கள், 6-45 வீட்டுவைத்தியம், 7-00 வாத்தியஇசை, 7-15 வயலின், 7-45 குறள் இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 மகாசிவராத்திரி — திருக்கேதீஸ்வர ஆலய நிகழ்ச்சி அஞ்சல்.


இன்று நள்ளிரவு
1-30 காட்சியுண்டு
**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6 30, 9-30
போயா நாட்கள் 2 30
ஜெமினி —பத்மினி
நடித்த
**எதிர்காலம்**

REGAL Jaffna
Daily 4-45, 7& 9-45 p. m.
Poya days 4 shows
Richard Brooks
in
IN COLD BLOOD
(Panavision)



## யாழ்ப்பாண மாவட்டம்

1. பயிற் செய்கைக்கு உகந்த தோட்டம்.

2 பிறவுண் றோட்டில் இரண்டு பரப்புக் காணியும் பூர்த்தியடையாத வீடும்.

3. நாவற்குளி, சண்டிக்குளி, யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் கட்டடத்துக்கான காணிகள்.

4. பரந்தன் பூநகரி றோட்டில் 32 ஏக்கர் வயல் விலை ரூபா 23,000/-.

5. வண்ணார்பண்ணையில் ஒன்றரைப் பரப்புக் காணியும் மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடும்.

லான்ட் இன்வெஸ்ற் மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7453 2786

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 286 நம்பர் கடையில் நகை அடைவு பிடிப்பவர் ப. க. பரமநாதன் அவர்களிடம் 1-1-68 தொடக்கம் 31-7-69 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 17-3-71 புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.
2791

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

இன்று முதல் ஆரம்பம்
**மனோகரா—யாழ்ப்பாணம்**
தினசரி 3 காட்சிகள் போயா நாட்களில் 4 காட்சிகள்
★ காந்தாராவ் ★ தேவிகா
★ பாலையா ★ லலிதா
★ ஜோதிலட்சுமி
முதலியோர் நடித்த
**சுகுண சுந்தரி**
மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று நள்ளிரவு 1-30 மணிக்குவிசேட காட்சி காண்பிக்கப்படும்.


## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

நல்லூர் வடக்கில் ஒன்பது பரப்புக்காணி முழுவதும் இருபத்தேழாயிரம் துண்டுகளாகவும் வாங்கலாம்' உருமையாளரின் விலாசம். (நாகரல்ல) 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2846

நல்ல நிலைமையிலுள்ள CE 8052 இலக்கமுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு க. கனகராஜா, காங்கேசன்துறை வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
2851

100 அந்தர் பாரம் ஏற்றக்கூடிய லொறி ஒன்றும் (CY 7986) 4 1/4 கன அடி அளவுள்ள ஐஸ்பெட்டி ஒன்றும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். A. துரைராசா, துரைராசா ஸ்ரோர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில்.
2847

காரைநகர் வடக்கு மல்லிகைக் குறிச்சியில் 6 பரப்பு வீடும், வளவும் கிணற்றுடன் விற்பனைக்குண்டு M. கனகசபை, ஜெயலட்சுமி மரக்காலை, 56, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
2853

### தேவை

வடமராட்சி பகுதியிலுள்ள அச்சகத்திற்கு, அச்சுவேலையில் நல்ல அனுபவம் உள்ளவரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உங்கள் அனுபவத்தையும், சம்பளத்தையும் குறிப்பிட்டு எழுதவும். விளம்பர இல. 2849, மே/பா "ஈழநாடு", யாழ்ப்பாணம்.
2849


### கவிஞருக்கு பொன்னாடை

யாழ்ப்பாணம், செவ்வாய்

நெடுந்தீவு நடுக்குறிச்சி றோமன் கத்தோலிக்க ஆண்கள் வித்தியாலயத்தின் 95-வது வருட நிறைவுவிழா வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆ. சி. நல்லையா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் நடனம், நாடகங்கள் போன்ற கலை நிகழ்ச்சிகளும் கவியரங்கமும் இடம்பெற்றன. கவியரங்கத்தில் கலந்துகொண்ட கவிஞர்கள் வித்துவான் ச. அடைக்கலமுத்து ஆசிரியர் ச. அமிர்தநாதர் ஆகியோருக்கு கவியரங்கத்திற்கு தலைமை தாங்கிய திரு. ஆ. ஞானப்பிரகாசம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

### உற்சவம்

தெல்லிப்பழை, திங்கள்

தெல்லிப்பழை ஸ்ரீ செல்லப்பிள்ளையார் ஞானவைரவ சுவாமி ஆலய 25-வது ஆண்டு வெள்ளிவிழா அலங்கார உற்சவம் மார்ச் மாதம் 2-ந் திகதி ஆரம்பமாகி 10 நாட்கள் வரை நடைபெறும்.

### சிவராத்திரிவிழா

கரவெட்டி மேற்கு கம்யூனிஸ்ட் வாலிப முன்னணியினரால் மத்தொனி புளியடி வைரவ கோவில் முன்றலில் மகா சிவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது.

திரு. வி. பொன்னம்பலம், திரு. பொன் குமாரசாமி, திரு. எம். வேதாரணியம், திரு கணேசன், திரு. எம். சி.சுப்பிரமணியம் ஆகியோர் உரைநிகழ்த்துவர். மற்றும் கலை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் இடம்பெறும்.


கலைக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட கலையுலக மேதை
எஸ். எஸ். வாசனின் கடைசிப் படைப்பு !
**யாழ். வின்ஸர் வெண்திரையில்**
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும் சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்
ஜெமினியின்
**விளையாட்டுப் பிள்ளை**
(ஈஸ்மன் கலர்)
மற்றும் நடிகர்கள்
காஞ்சனா, பாலையா, மனோரமா, சோ, ரோஜாரமணி.
குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய படம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் சிவில் மந்திரி சபை கலைக்கப்பட்டது

## தேசிய சட்டசபைக் கூட்டத்தில் மக்கள் கட்சி கலந்து கொள்ளும்?

ராவல்பிண்டி, பெப். 22

பாகிஸ்தான் சிவில் மந்திரிசபை இன்று முதல் கலைக்கப்பட்டது.

மேற்குப் பாகிஸ்தானும் கிழக்குப் பாகிஸ்தானும் பிளவுபடாத வகையில் புதிய அரசியல் சாசனத்தை தேசிய சட்டசபை ஆக்கினால் நாட்டிலுள்ள இராணுவச் சட்டத்தை நீக்கவிடுவதாக ஜனாதிபதி யாஹ்யாகான் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இதுவரை காலமும் ஆட்சி புரிந்துவந்த சிவிலியன் மந்திரிசபையை ஜனாதிபதி யாஹ்யாகான் கலைத்துவிட்டார்.

தற்பொழுது நாட்டில் நிலவும் அரசியல் நிலைமையை மனத்திற் கொண்டே சிவிலியன் மந்திரிசபை கலைக்கப்பட்டதாக ராவல்பிண்டியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது இன்று காலை முதல் இது நடைமுறைக்கு வரும். 9 பேரை அங்கத்தவர்களாகக் கொண்டு இச்சிவிலியன் மந்திரி சபை இயங்கியது 1969-ம்ஆண்டு ஆகஸ்ட் 9-ம் திகதி அமைக்கப்பட்ட இம் மந்திரிசபை 1971-ம்ஆண்டு பெப்ரவரி 22-ம்திகதியுடன் முடிவடைகிறது. நாட்டில் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டபொழுது 4 இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழு நாட்டை ஆட்சிபுரிந்தது. டாக்காவில் தேசிய சட்டசபை கூடுவதற்கு 10 நாட்களுக்கு முன் இச்சிவிலியன் மந்திரிசபை கலைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குப் பாகிஸ்தானும் கிழக்குப் பாகிஸ்தானும் பிளவுபடாதவகையில் டாக்காவில் கூடவிருக்கும் தேசிய சட்டசபை புதிய அரசியல் சாசனத்தை அமைத்தால் நாட்டில் தற்பொழுது அமுலில் இருக்கும் இராணுவச் சட்டத்தை நீக்கிவிடுவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தேசிய சட்டசபை வருகிறமார்ச் மாதம் டாக்காவில் கூடவிருக்கிறது பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் பெரும் பான்மை பலம் பெற்றுள்ள அவாமி லீக் தனது 6 அம்சத்திட்டத்தின் அடிப்படையிலேயே புதிய அரசியல் சாசனம் அமைக்கப்படவேண்டுமென மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இவ்விஷயத்தில் கட்சி சிறிதும் விட்டுக்கொடுக்காதென அவாமி லீக்கின் தலைவர் சேக் முஜிபர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப்பாகிஸ்தானியரின் பொருளாதார அமுக்கத்துக்குள் இன்னமும் இருக்கவோ, கிழக்குப் பாகிஸ்தான் சரண்டப்படவோ அனுமதிக்க முடியாது. எனவே கிழக்குப் பாகிஸ்தான் சுயாட்சிபெற்ற இணைப்பாட்சியில் இணைந்திருக்கவேண்டும் அவாமி லீகின் 6 அம்சத்திட்டம் நாட்டின் முன்னேற்றத்தை மனத்திற் கொண்டே தயாரிக்கப்பட்டது. என்று அவர் மேலும் தெரிவித்தார்

### மக்கள்கட்சி பங்குபற்றும்

டாக்காவில் கூட்டவிருக்கும் தேசிய சட்டசபையில் பாகிஸ்தான் மக்கள்கட்சி பங்கு பற்றுமென அறியப்படுகிறது தேசியசட்டசபையில் இரண்டவது பெரும் பான்மை பலமுடைய இக் கட்சி அவாமிலீக்குடன் கருத்து வேறுபாடு கொண்டது. அவாமிலீக்கினால் முன் வைக்கப்பட்ட 6 அம்சத் திட்டத்தை இக்கட்சி முற்றாக எதிர்க்கிறது, குறிப்பாக கிழக்குப்பாகிஸ்தானுக்கு சுயாட்சிவேண்டுமென்ற அவாமிலீக்கின் கொள்கையால் நாடு பிளவுபடுமென மக்கள் கட்சி கருதுகிறது. இக்கொள்கையில் இவர்களது கருத்தையே ஜனாதிபதி யாஹ்யாகான் கொண்டிருக்கலாமென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

இதே நேரத்தில் நாட்டின் முழுவளர்ச்சிக்கு சமஷ்டி இணைப்பே உகந்ததென்றும் மத்திய அரசு வெளிநாட்டுத் தொடர்புகள், பாதுகாப்புக்கள். செலவினங்கள் வர்த்தக ஒப்பந்தங்கள் ஆகியவற்றைச் செய்வதற்கு அதிகாரம் உடையதாக இருப்பது நல்லதே ஒன்று சில அரசியல் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவாமி லீக்கின் தலைவர் சேக் முஜிபர்ரஹ்மான் கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள அரசியல்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகத் தெரிகிறது.

## துப்பாக்கியால் பயமுறுத்தி தப்பிய கைதிகள்

கல்கத்தா, பெப் 22

வங்காளத்தில் சிறையில் இருந்த 23 கைதிகள் தப்பி ஓடிவிட்டனர். இக்கைதிகளில் நக்சல்பாரிகளும் இருப்பதாக சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார்

இவர்கள் தப்பிச்செல்வதற்காக சிறைக்காவலாளிகள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் தப்பிச் சென்றவர்களில் நான்கு கைதிகளை புறநகர்ப் பகுதிகளில் கைதுசெய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

—

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் செவ் 'மில்க்வைற்சோப்' ஸ்தாபனத்தார் 'மகாசிவராத்திரி வரலாறு' என்னும் கைக்கடக்கமான நூல் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இது 'மில்க்வைற்சோப் ஸ்தாபனத்தாரின் 29வது வெளியீடாகும். 0 0

நயினாதிவு- ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு, நயினாதீவைச் சேர்ந்த மு. பாலசுந்தரம் தம்பதிகள் 'மகாசிவராத்திரி' என்ற ஒரு நூலை வெளியிட்டுள்ளனர். ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் சிவராத்திரி மகிமை என்ற விஷயமும், ஸ்ரீ காமகோடிபீடாதிபதி அவர்களின் திருவாக்கும் சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்களின் சிவராத்திரிபற்றிய விளக்கமும் மற்றும் மகாத்திரப் பாக்களும் இந்நூலை நன்கு அலங்கரிக்கின்றன. சைவப் பெரியார்களுக்கு இந்நூல் சிறந்த வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

## 'விமானக் கடத்தலுக்கு பாக். உளவுப்படை காரணம்'

ஸ்ரீநகர், பெப் 22

லாகூரில் அழிக்கப்பட்ட இந்திய விமானத்திற்குரிய நஷ்டஈட்டைப் பாகிஸ்தான் கொடுக்கச் சம்மதிக்காதவரை பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே புதிதாக ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தமுடியாது என்று காஷ்மீர் முதலமைச்சர் திரு ஜி. என். சாதிக் ஸ்ரீநகரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தா

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில். இந்த விமானக் கடத்தலுக்கும் பாகிஸ்தான் உளவு இலாகாவுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது காஷ்மீரில் இயங்குகின்ற தேசவிரோத சக்திகளுக்கு பின்னணியில் இருந்து இவ்விலாகா உதவி புரிகிறது. அவர்களுக்கு ஆயுதங்கள். மற்றும் வெடி மருந்துகள் ஆகியவற்றை வாங்குவதற்கு பாகிஸ்தான் உளவு இலாகா கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்திருக்கிறதென்றார்.

## 'பண்புள்ள சமுதாயத்தின் மூலம் நாட்டை உருவாக்கலாம்'

யாழ்ப்பாணம், செவ்வாய்

"நெடுந்தீவு பல அறிஞர்களை உருவாக்கிய நாடு, தமிழ் கூறும் நல்லுலகம் பூரிப்படையும்படியும் பொலிவுறும்படியும் கடமையாற்றும் வண. தனிநாயக அடிகளார் தொடக்கம் பல புலவர்களையும் வித்துவான்களையும் ஆசிரிய மணிகளையும் தமிழ் உலகிற்குத் தந்துள்ள நாடு நெடுந்தீவு. இங்கு தமிழ் தானாகவே செழித்து வளருகிறது பாடசாலை மாணவர்கள் மிக புத்தி விவேகம் உள்ளவர்களாக இருப்பதைக் காண்கிறேன்' என புனித யுவானியார் அரங்கத்தில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. சி. நல்லையா குறிப்பிட்டார்.

யாழ் நகர் துணை ஆயர் வந். எல். ஆர். அன்ரனி இவ்விழாவினை ஆரம்பித்து வைத்தார். வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களான திருவாளர்கள் ச. சின்னப்புநாயகம். யோ. ஞானப்பிரகாசம், சு. ஞெருகேசியன் ஆகியோரின் உருவப் படங்களை துணை ஆயர் திரைநீக்கம்செய்து அவர்களின் சேவைகளைப் பாராட்டினார்.

நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ரி. அம்பலம் உரைநிகழ்த்துகையில் நெடுந்தீவில் இன்றுள்ள பல கல்விமான்களை, ஆசிரியர்களை, எழுதுவினைஞர்களை உருவாக்கிய பெருமை முன்னாள் அதிபர் திரு. ச. சின்னப்புநாயகம் என்பவரின் அயரா முயற்சி எனவும் அவரைப்போல் தன்னலம் கருதாது பாடசாலைக்கு ஆசிரியர்கள் பலர் சேவைபுரிந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

விழாவில் சொற்பொழிவாற்றிய அஞ்சல்பகுதி திரு ச. அ. செபரத்தினம் மாணவர்கள் ஒருநாளில் ஐந்து மணி நேரத்தை மாத்திரம் பாடசாலையில் செலவழிப்பதாகவும் மிகுதியான பத்தொன்பது மணி நேரமும் அவர்கள் தமது தாய்தந்தையரது கண்காணிப்பில் வீட்டில் இருப்பதால் அவர்களை நல்வழிப்படுத்தும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களிலும் பார்க்க பெற்றோருக்கே உரியது எனக் குறிப்பிட்டார்.

கவிஞர்களான வித்துவான் ச. அடைக்கலமுத்து. (அமுது) ஆசிரியர் திரு ச. அமிர்தநாதர் ஆகியோருக்கு 'பாதுகாவலன்' முன்னாள் ஆசிரியர் திரு. அ. ஞானப்பிரகாசம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

# எகிப்து முடிவுக்கு இஸ்ரேல் வரவேற்பு

## ஆனல் 1967 யுத்தத்திற்கு முன் இருந்த எல்லையிலிருந்து விலகாதாம்

கெய்ரோ, பெப். 22

ஐக்கிய அரபுக் குடியரசு மேற்காசியாப் பிரச்னையில் புதியதோர் உடன்படிக்கையைச் செய்து கொள்ள இணக்கம் தெரிவித்ததை இஸ்ரேல் வரவேற்றுள்ளது.

மேற்காசியா சமாதானத் தூதுவர் டாக்டர் குனர் ஜாரிங்கின் சமாதான நடவடிக்கையை வெளிப்படையாகவே இஸ்ரேல் நிராகரித்து விட்டதாக கெய்ரோ வானொலி அறிவித்தது.

இஸ்ரேலுடன் மேற்காசியாப் பிரச்னையில் புதியதோர் சமாதான உடன்படிக்கையைச் செய்து கொள்ள ஐக்கிய அரபுக் குடியரசு சம்மதம் தெரிவித்ததை இஸ்ரேல் வரவேற்றுள்ளது. இதுபற்றி ஜெருசலத்தில் நடந்த இஸ்ரேலிய மந்திரி சபையில் ஆராயப்பட்டது.

ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் இஸ்ரேலுக்குமிடையே தகராறுக்குரிய சகல பிரச்னைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள இஸ்ரேல் தயாராக இருக்கிறது. ஆனல் 1967-ம் ஆண்டு நடைபெற்ற போருக்கு முந்திய எல்லைகளில் இருந்து இஸ்ரேல் விலகாது தற்பொழுதிருக்கும் போர் ஒய்வு பகுதிகள் பற்றியும், இரு பகுதியினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய எல்லை சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேல் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எகிப்து கண்டனம்

மேற்காசியப் பிரச்னையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய அரபுக் குடியரசு எல்லா வகையிலும் முயற்சி செய்தது இஸ்ரேல் மந்திரி சபையின் இப்போதைய முடிவு மேற்காசியா சமாதானத்தூதுவர் டாக்டர் குனர் ஜாரிங்கின் சமாதானத் திட்டங்களையும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களையும் வெளிப்படையாகவே நிராகரிக்கும் செயலாகவே இருக்கிறது என கெய்ரோ வானொலி தெரிவித்தது.

## "மதசார்பற்ற பாலஸ்தீனம் வேண்டும்"

—விடுதலை முன்னணி

டமாஸ்கஸ், பெப். 22

டமாஸ்கஸில் கூடிய பாலஸ்தீன விடுதலை முன்னணி பாலஸ்தீனத்தில் அமைக்கும் நாடு. மதச்சார்பற்றதாக இருக்கவேண்டும் என்பதே தமது குறிக்கோள் என அறிவித்துள்ளது யூத மதம். கிறிஸ்தவ மதம் முஸ்லிம் மதம் ஆகிய மதங்கள் அங்கு சமநிலையில் பாதுகாக்கப்படும் என்றும் விடுதலை முன்னணி கூறியுள்ளது.

டமாஸ்கஸில் கூடிய பாலஸ்தீனக் கொரில்லாக்கள் கூட்டம் அதன் தலைவர் இல்லாமலே நடந்தது பாலஸ்தீன விடுதலை முன்னணியின் கருத்து வேறுபாடுகள் அதிகமாவதாகச் சொல்லப்படுகிறது. திரு. அரபாத்தின் தலைமைப் பதவிக்கு எதிர்ப்பு இருந்துவருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். பாலஸ்தீன விடுதலைத் தளபதி பிரிகேடியர் அப்துல் ரசாக் அல்-யாஹியாவிடமிருந்தே இவரது தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது அடுத்த வாரம் கெய்ரோவில் நடக்கவிருக்கும் பாலஸ்தீன தேசிய சபையில் இதன் முடிவு வெளிப்படையாகத் தெரியலாமென அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஜோர்டானின் வடபகுதியிலுள்ள ஜெராஷ் என்னும் இடத்திலுள்ள இரகசியத் தலைமையகத்திற்குச் செல்லவேண்டி இருந்ததால் கடந்த இரவு நடந்த கூட்டத்திற்கு திரு அரபாத் செல்லவில்லை பிரிகேடியர் யாஹியா மத்திய செயற்குழுக் கூட்டத்தைப் பகிஷ்கரிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அவர் கூட்டத்தில் கலந்துகொண்டதற்குரிய காரணம் தெரியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சில மலர்கள் கண்ணைக் கவரும் வண்ணங்கள் கொண்டவை; ஆனால் அவற்றில் மணம் இருக்காது. சொல்வது போல் நடக்காதவனுடைய சொற்களும் இம்மலர்களைப் போன்றவையே. கேட்பதற்கு இனிமையாக இருக்கும்: ஆனால் பயன் இருக்காது.

—புத்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Teiegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 11ந் திகதி ( 23 - 2 - 71 )


## சிவராத்திரி

வடக்கே கைலாசம் முதல் தெற்கே கதிர்காமம் வரை சைவ உலகமெல்லாம் இன்று சிவராத்திரி புனித மாகக் கொண்டாடப்படுகின்றது ஈழத்து திருப்பெருந்துறை என்னும் திருக்கேதீச்சரத்துக்குப்பல்லாயிரக்கணக்கானவர்கள் சென்று சிவ சிந்தையுடன் பக்தி சிரத்தையுடன் இவ்விரதத்தைக் கைக்கொள்கின்றார்கள். கதாப் பிரசங்கங்கள், புராணபடனம் நான்குகாலப் பூசை, உபந்நியாசங்கள், இன்னிசை பக்திப்பாடல்கள் முதலிய நிகழ்ச்சிகளுக்கு ஆங்காங்கே ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன.

இரவெல்லாம் இலங்கை வானொலி இந்நிகழ்ச்சிகளை அஞ்சல்செய்து. சைவ உலகம் இந்த ஓர் இரவாவது ஒன்று சேர்ந்து சிவபெருமானை தூங்காமல் மறவாமல் வீடுகளிலிருந்தும் தியானித்துத் தூயவர்களாக இருக்க உதவுகின்றது அரசாங்கமும் இன்று விடுமுறைவிட்டு, இதற்கு ஆதரவு காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவையெல்லாம் மூடநம்பிக்கையென்றும், பயனற்றதென்றும் பகுத்தறிவாளர் என்று கூறிக்கொள்பவர்கள் சொல்லக்கூடும் ஆனால் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக இப்புனித விரதங்களை அனுஷ்டிக்கும் கோடிக்கணக்கான மக்களும் அறிவற்றவர்களாக இருக்க முடியாது. மேலும் இதில் பயன் காணுதிருப்பின், இவை இவ்வளவு காலமும் நீடித்திருக்குமா? ஏராளமான மக்கள் பயன்கண்டும், இனியும் தாங்கள் தொடர்ந்து பயனடைய முடியுமென்றும் நம்பியே இதுபோன்ற விரதங்களைக் கொண்டாடுகின்றார்கள்

என்ன பயன் என்ற கேள்வி எழலாம். நமக்கு அன்றாடம் வாழ்க்கையில் எவ்வளவோ சிக்கல்கள் எதிர்காலம் பற்றிய அச்சங்கள். ஆறுதல் கூறி வழிகாட்டவும் நம் பயங்களையும் பிரச்னைகளையும் தீர்க்கவும் யாருமில்லை என்று திகைக்கின்றோம். இவ்வித திகைப்பிலிருந்து நம்மை மீட்கவும், நமக்குள்ளேயே எல்லாம் வல்ல கருணை மிக்க ஒரு மகாசக்தி இருந்து, நம்வாழ்க்கையை இன்பமயமாக்க காத்துள்ளதென்பதையும், அச்சக்தியை இமைப்பொழுதும் மறவாமல் இருந்தால், நமது வாழ்க்கைப் பிரச்னைகள் எல்லாம் பரிதியைக் கண்ட பனி போல் தீர்ந்துவிடுமென்ற உண்மையையும் நமக்கு அறிவுறுத்தி நம்பிக்கை ஊட்டுவதாயின் அதைவிடப் பெரிய பயன் நமக்கு வேறென்ன இருக்க முடியும்?

'கடவுள் ஒருவர் இருக்கின்றார். அவர் எல்லாம் வல்லவர் எங்கும் நிறைந்தவர், யாவும் அறிந்தவர். கருணை மிக்கவர் என்ற உண்மையை பல பெரியோர்கள் உணர்ந்துள்ளதுடன், தாங்கள் பெற்ற இன்பத்தை, விடுதலையை எல்லோரும் பெற வேண்டுமென்றுமே இவ்வித விரதங்களை ஏற்படுத்தியுள்ளனர். இதை நம்பிக்கையுடன் பின்பற்றுகிறவர்களுக்கு வாழ்க்கைப் பளுவும் குறைந்து மன நிம்மதி ஏற்படுவதை அனுபவத்தில் கண்டவர்கள் இதைக் கைவிடுவார்களா?

ஆனால் நம்மில் பலருக்கும் பொதுவாகத்தெய்வத்தைப் பற்றி நம்பிக்கையுள்ளதெனினும், அவரை அடிக்கடி மறந்துவிடுகிறோம் மறக்கும் போதுதான் திகைப்பும் பயமும் ஏற்படுகின்றது நம்மனதில் அன்பற்ற எண்ணங்கள் ஏற்பட்டு, நம்அமைதியைக் குலைக்கின்றது. அவரை மறவாதிருக்கவே இவ்விரதங்கள்.

'சிவம்' என்பதற்கு அன்பு என்பதே பொருள் என்பது திருமூலரின் தெய்வீக வாக்கு. அன்பு வேண்டாமென்று 'பகுத்தறிவாளர்' உள்ளிட்டு யாரும் சொல்ல மாட்டார்கள். சுயநலம் எங்கே முடிகிறதோ அங்குதான் அன்பு ஆரம்பமாகும். உள்ளத்தில் அன்பாகிற சிவம் உதயமாக அவன் அருள் தேவை. நாம் அதைப் பெறத்தகுதியாவதே இவ்வித வழிபாடுகள் விரதங்கள் முதலியவற்றின் உண்மை நோக்கமாகும். நமது வாழ்க்கை உண்மையில் அன்பை (சிவத்தை) அடிப்படையாகக்கொண்டு விட்டால், வேறு நமக்கு என்ன வேண்டும்?

# சிவராத்திரியின் சிறப்பு

"ஈழவேந்தன்"

### இந்துக்களின் இதயம்கவர்ந்தவிழா

இந்தியத் துணைக்கண்டத்திலும் இந்துமதம் பரவிய உலகின் ஏனைய பகுதிகளிலும் சிறப்புடன் கொண்டாடப்படும் விழாக்களில் அல்லது நோற்கப்படும்நோன்புகளில் 'சிவராத்திரி' சிறப்பிடம் பெறுகிறது.

### விழா என்பதின் பொருள் யாது

விழா எனும் வியத்தகு தமிழ்ச்சொல் எவ்விதம் தோன்றியது என்பதையிட்டு அறிஞரிடை கருத்து வேற்றுமை உண்டெனினும் 'விழித்திருந்து கொண்டாடப்படுவது விழா' என்று பொருள் விரிப்போரும் உளர். இப்பொருள் விரிவு எவ்வளவு தூரம் ஏற்புடையதென்று யாம் கூறல் கடினம். எனினும் சிவராத்திரிவிழாவைப் பொறுத்தவரை இக்கருத்து பொருத்தமுடையதாகவே தோன்றுகிறது.

### தாயுமானவரின் தகைசார்ந்த கருத்து

சிவராத்திரிவிழா விழித்திருந்தே கைக்கொள்ளப்பட வேண்டுமென்ற கருத்தினை பின்வரும் 'சிவராத்திரியின் போது துயிலோம் என்ற விரதியரும் அறிதுயில்போல் இருந்து துயில்வார்' என்ற தாயுமானவர் பாடல் சான்றாக அமைகிறது.

### சிவராத்திரியின் தனிச்சிறப்பு

சிவராத்திரி வழிபாட்டின் உயர்வு எளிதில் விளக்குதற்குரியதல்ல மறைகளில் சாம மறையும் வேள்விகளில் குதிரை, (அசுவமேதமும்) வேள்வியும், மலைகளில் மாமேருவும் ஆறுகளில் கங்கையும் ஐம்பூதங்களில் வானமும் தேவர்களில் தெய்வ இந்திரனும் தலைமைபெற்று விளங்குவதுபோல், பிறவா யாக்கைப் பெரியோராகிய- தில்லைக்கூத்தனுக்கு - தென் பாண்டி நாட்டானுக்குரிய விழாக்களில் - நோன்புகளில் சிவராத்திரி விழாவும் நோன்பும் முதன்மைபெற்று விளங்குகிறது. இக்கருத்தினைப் பின்வரும் பாடல் அழகுற ஆழமுற எடுத்து இயம்புகிறது.

'மறைகளிற் சாமம், மகங்களிற் புரவி
மகம்; மலைகளில் மகமேரு
நிறைபுனல் நதியிற் கங்கை ஓர் ஐந்தாய்
நிகழ்ந்த பூதத்தின் ஆகாயம்
முறைதெரி சுரரிற் கருமுகில் ஊர்தி
முதன்மை பெற்று உயர்ந்ததே போல
அறைதரும்விரதம் அனைத்தினும் உரைக்கும்
அரன் இரவு அதிகம் என்று அறிமின்.

சிவராத்திரியின் தனிச் சிறப்புபற்றி அறுதியிட்டு உறுதியுடன் கூற இப்பாடல் தவிர்த்து ஏனைய பாடல்உண்டோயாம் அறியோம்.

### பழமையும் புதுமையும்

ஒற்றுமை என்பது ஒன்றுபடுதலும் அல்ல, வேற்றுமை என்பது வேறுபட்டு வெறியாட்டம் ஆடுவதும் அல்ல. இந்த உன்னத கோட்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாக வேற்றுமையில் ஒற்றுமையை வலியுறுத்தி விவேகானந்த அடிகள் விளம்பியதற்கமையவும் துலங்கும் இந்தியத்துணைக்கண்டத்தின் வெவ்வேறுபிரிவுகளில்உள்ள மாந்தரால் சிவராத்திரிவிழா முன்னைப் பழமைக்கும் பழமையாக விளங்கவும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப்பெற்றியதாய் விளங்கவும் சிறப்புற- சிந்தை நெகிழ்வுற எங்கும் கொண்டாடப்படுகிறது.

### சிவலிங்க வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது

இச் சிவராத்திரிவிழாவில் சிவன் 'சிவ லிங்க' விழாவிலேயே தனிச்சிறப்புடன் வழிபடப் படுகிறான், சௌராட்டிரத்துச் சோமநாதர், சிறீசைவம் மல்லிகார்ச்சுனர், உஜ்ஜயினி மகாகாளர், கேதாரநாதத்துக் கேதாரேசுவரர், ஓங்காரத்து பரமேசுவரர். சித்தபூமியில் திகழும் வைத்தியநாதர், தாருகவனத்து நாகேசர், கோதாவரி ஆற்றங்கரையில் தாகினி என்னும் தலத்திலுள்ள பீமசங்கரர், சிவாலயத்து குசுமேசர், காசிவிசுவநாதர் நாசிக் கருகில் கௌதமியாற்றின் கரையில் விளங்கும் திரியம்பகேசுவரர், இராமேசுவரம் இராமநாதர் போன்றஒளிக் குறிகளுக்கு (சோதிலிங்கங்களுக்கு) சிவராத்திரியன்று நடாத்தப்படும் சிறப்புப் பூசைகளும் வழிபாடுகளும் எம் கூற்றினைவலியுறுத்திநிற்கும். இவ் வழிபாட்டில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பரவசம் எய்திநிற்கும் காட்சி கண்கொள்ளாதகாட்சியாகும்.

### ஈழத்திலும் சிறப்புப்பெற்றவிழா

ஈழத்தில் பாடல்பெற்ற தலங்களாகிய கேதீஸ்வரத்திலும், கோணேஸ்வரத்திலும், முனீஸ்வரத்திலும் மற்றும் ஏனைய தலங்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி இறையோடு இதயம் ஒன்றும் காட்சி இன்பம் நிறைந்த காட்சியாகும். சிவராத்திரி விழா எப்போது தோன்றியதுஎன்பதைஅறுதியிட்டுக் கூறமுடியாமல் இருக்கிறது எம் அறிவிற்கும் ஆய்விற்கும் அப்பாற்பட்ட பழமையும் மறைந்துள்ளது. எனினும் சிவராத்திரியின் வரலாறு பற்றி கந்த புராணம், சிவபுராணம், லிங்கபுராணம் மாபாரதத்தின் ஒரு பகுதியான சாந்தி பர்வமும், வரதுங்க ராம பாண்டியர் இயற்றிய பிரமோத்தர காண்டமும் வயலூர்ஞானவரோதயர்பாடிய உபதேச காண்டமும், யாழ்ப்பாணம் காசி அ. வரதராச பண்டிதர் என்னும் பெரும் புலவர் இயற்றிய சிவராத்திரி புராணமும் சிவராத்திரியின் சிறப்பியல் செப்பி நிற்கின்றன.

### கந்தபுராணம் கூறும் கருத்து

இவற்றுள் கந்தபுராணம் ஒருகாலத்தில் சிவன் திருவண்ணாமலையில் பேரொளிப் பிழம்பாகத் தோன்றி வெளிப்பட்டு அருளினன் என்றும் அவன் அருவிய இரவே சிவராத்திரி என்று கணிக்கப் படுகிறதென்றும் கூறுகிறது. அத்துடன் இச்சிவராத்திரியில் வழிபட்டோர் பலபேறுகளைப் பெற்றனர் என்றும் எடுத்து இயம்புகிறது. இதோ பொருள் பொதிந்த அப்பாடல்:

"அரியும் யானும் முன் தேடும் அவ்
அறைகிரி, அனல
கிரியெனும்படிநின்றதால்!
அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவராத்திரி
ஆயினது இறைவற்
பரவி உய்ந்தனர் அன்னதோர்
வைகலிற் பலரும்"

மற்றும் சிவராத்திரியின் தோற்றம் பற்றி ஆரூரரும், சிவஞானசித்தியாரில் அருணந்தி சிவாச்சாரியாரும் கூறும் கருத்துகள் சுவையுடையதெனினும், அவற்றை விரிக்கின்பெருகும் என்று அஞ்சுவதால் அவற்றை இங்கு விரிக்காது விடுகிறோம்,

### ஐந்து வகைப்படும்

சிவராத்திரியானது மாக சிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பட்சசிவராத்திரி, மாத சிவராத்திரி என ஐவகைப்படும். இவற்றுள் மாசித் திங்களில் தேய்பிறையின் பதின்னான்காம் நாளில் அதாவது தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மாக சிவராத்திரி எனக் கணிக்கப் பட்டுள்ளது. இங்கு மாக என்ற சொல் மாசிமாதத்தைக் குறித்து நிற்கும் இதுவே ஆண்டு சிவராத்திரி—மகா சிவராத்திரி எனக் கொண்டாடப்படுகிறது.

### பயன் பல தரும் விழா

திரயோதசியும் சதுர்த்தசியும் இணைந்த இரவு சிவலிங்க வடிவமாகும். அத்தகைய சிவராத்திரியிற் சிவ வழிபாடு செய்வோர் பன்னிரண்டு கோடிச் சிவலிங்கங்களை ஒருங்கே வழிபட் [..] பயனைப் பெறுவர் எனசம[..] நூல்கள் சாற்றுகின்றன.

"பன்னிரு கோடி
மூலமாம் இலிங்கங்களை
முறைமையிற் சென்று
சிலமோடு கண்டுறு பய[..]
சிறப்புறச் செறியும்[..]
என்றபாடல் இதற்குச் சா[..]றாகும்.

### பயன் பெற்றோர் பட்டியல்

மற்றும் சிவராத்தி[..] நோன்பினை நோற்று ஞாயி[..] திங்கள் (சந்திரன்), மு[..]கன், கூற்றுவன், மன்மத[..] இந்திரன், தீயின் தெய்வ[..] (அக்கினி) குபேரன் ஆ[..]யோர் வேண்டுவார் வே[..]டுவதை ஈழந்திடும் இ[..]வன் என்ற கூற்றுக்கை[..] தாம் வேண்டிய அனைத்[..]யும் பெற்று பெருமிதமு[..] பேறுவகையும் பெருவா[..]வும் எய்தினரென்றும் பு[..]ணங்கள் புகழ்பாடுகின்ற[..] இக் கருத்தினை உள்ளட[..]கும் பாடல் இதோ:

"இந்த நல் விரதங்க[..]
சிவன் நந்தி[..]
இசைத்திட உணர்ந்து[..]
செங்கதிரோ[..]
கந்தவேள், கதைக்கை[..]
காலன் விற்காம[..]
கடவுளர், கண்ணெர்[..]
ஆயிரத்தோ[..]
செந்தழற் கடவுள், ம[..]
நிதிக்குபேர[..]
செப்பியவரன் முறை
நோற்[..]
தந்தம மனத்தில்
விழைந்தன பெற்[..]
தகைபெறு தலைவர் ஆ[..]
ர[..]

### மூவேழ்காலமும் முடிவிலா இன்பம்[..]

சுருங்கக் கூறின் சிவரா[..]திரி நோன்பினை உள்[..] தூய்மையோடு ஆகமநெ[..] வழியில் நான்கு சாமங்க[..]லும் இறைவனை நீராட[..] அழகுசெய்து மலர் தூ[..] தூபம் காட்டி, பொங்[..] படைத்து திருமுறை[..] உள்ளம் உருக ஓதி[..] படின் வான்கலந்த மாணி[..] வாசகரின் தேன்கலந்த வ[..]கத்தில் காணப்ப[..] "மூவேழ் சுற்றம் முரண[..]நரகிடை ஆழாமேய[..] அரசே போற்றி" எ[..] ெ[..]ற்தொடருக்கு அ[..] தாமும் இறையருள் பெ[..] தம் உற்றார் உறவின[..] மூவேழு தலைமுறைகள்[..]யாய இன்பத்தின் நுகர்[..] உறுதி.

"மாசி மகத்திற் சிவ[..]
நிசி[..]
மழுமான் ஏற்றி மலர்[..]
பா[..]
பூசை புரிவோர் தாம்[..]
வே[..]
போகம் முழுதும் கை[..]
கொள்[..]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப்பு

...டு கோடிச் சிவலிங்
... ஒருங்கே வழிபட்ட
...ப் பெறுவர் எனசமய
... சாற்றுகின்றன.
...னிரு கோடி
...ாம் இலிங்கங்களை
...றமையிற் சென்று
...மாடு கண்டுறு பயன்
...புராசச் செறியும்''
...ாடல் இதற்குச் சான்

## ... பெற்றோர்

...லை

...ும் சிவராத்திரி
...பினை நோற்று ஞாயிறு
... (சந்திரன்), முரு
...ற்றுவன், மன்மதன்,
...ன், தீயின் தெய்வம்
...னி) குபேரன் ஆகி
... வேண்டுவார் வேண்
... ஈழந்திடும் இறை
...ன்ற கூற்றுக்கணைய
...வேண்டிய அனைத்தை
...பெற்று பெருமிதமும்,
...வையும் பெருவாழ்
...எய்தினரென்றும் புரா
... புகழ்பாடுகின்றன.
...ருத்தினை உள்ளடக்
...ாடல் இதோ:

...ந்த நல் விரதங்களைச்
சிவன் நந்திக்கு
...சத்திட உணர்ந்து
செங்கதிரோன்
...வேள், கதைக்கைக்
காலன் விற்காமன்
...வுளர், கண்ணோர்
ஆயிரத்தோன்,
...தழற் கடவுள், மதி,
நிதிக்குபேரன்
...ப்பியவரன் முறை
நோற்றுத்
...ம மனத்தில்
...விழைந்தன பெற்றுத்
...பெறு தலைவர் ஆயின
...''

## ...ழ்காலமும்
## ...லோ இன்பம்பெற

...ங்கக் கூறின் சிவராத்
...நோன்பினை உள்ளத்
...மையோடு ஆகமநெறி
... நான்கு சாமங்களி
...இறைவனை நீராட்டி
...செய்து மலர் தூவி
... காட்டி, பொங்கல்
...த்து திருமுறைகளை
...ளம் உருக ஓதிவழி
...வான்கலந்த மாணிக்க
...ரின் தேன்கலந்த வாச
... காணப்படும்
...ழ் சுற்றம் முரணுறு
...ட ஆழாமேயருள்
... போற்றி'' என்ற
...தொடருக்கு அமைய
... இறையருள் பெற்று
...உற்றார் உறவினரும்
...ழ தலைமுறைகள் தலை
...ஆன்மத்தின் நுகர்வது

...சி மகத்திற் சிவ
நிசியின்
...மான் ஏற்றி மலர்ப
பாதம்
...ச புரிவோர் தாம்
வேட்ட
...கம் முழுதும் கைக்
கொள்வர்''

ஆசிரியருக்குக்கடிதங்கள்

## சிவராத்திரி புராணம்

பல்லாண்டுகளுக்கு முன்னால் சுன்னாகம் வரதராச பண்டிதரால் இயற்றப்பெற்ற சிவராத்திரி புராணம் மூன்றும் முறையாகவும் புதியஉரையுடன் வெளிவந்திருக்கிறது. சிவராத்திரி புராணம் சிவராத்திரி விரதத்தின் மகத்துவத்தையும் அவ்விரதத்தை அனுஷ்டித்துப்பேறு பெற்றவர்களின் சரிதைகளையும் எடுத்துரைக்கிறது.

இந்நூலின் மூன்றுவது வெளியீட்டுக்குஉரை எழுதியவர் உடுப்பிட்டித் தமிழறிஞர் திரு. ம. குமாரசூரியப்பிள்ளையாவர்கடந்த21ம் திகதி ஈழநாடு இதழில் யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சக உரிமையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை இந்நூலுக்கு உரைஎழுதியதாக வெளியானது தவறு திரு. கணபதிப்பிள்ளை தான் இந்நூலை வெளியிட்டவராவர்.

முன்னாள் ஆசிரியரான திரு. கணபதிப்பிள்ளை ஞான நூல்களை வெளியிடும் விஷயத்தில் மிக்க ஊக்கமுடையவர். சைவநன் மக்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்காமல் சமயசம்பந்தமான பல நூல்களைத்தமது அச்சகத்தில் பதிப்பித்து உதவியிருக்கின்றார். மெய்கண்டதேவரின் பொழிப்புரை உதாரணச்செய்யுள்களோடு சிவஞானபோதத்தை முன்னர் வெளியிட்டு உதவிய இவர் இப்போது சிவராத்திரிபுராணத்தை நல்லமுறையில் அச்சிட்டு சைவநன்மக்களுக்கு அளித்துள்ளார். 426 க்கு மேற்பட்ட பக்கங்களைப் பெரும்பொருள் செலவு செய்து அற்பவிலைக்கு வழங்க முன்வந்த மறவன்புலோ திரு மு. கணபதிப்பிள்ளையின் துணிச்சலையும், சிவராத்திரி சம்பந்தமாகச் சைவமக்கள் படித்துத்தியானஞ் செய்ய ஒரு நூல் இல்லாத குறையை உணர்ந்து சுன்னாகத்துப் பெரும் பண்டிதரால்ஆக்கப்பெற்ற சிவபுராணத்திற்கு நல்லுரைவழங்கிய அச்சுவேலியில் சிறந்து உடுப்பிட்டியில் வாழ்க்கை நடத்திய பண்டிதர் குமாரசூரியப்பிள்ளையின் திறனையும் பாராட்ட சைவத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

— 'சிவனடியான்'
யாழ்ப்பாணம்.

---

யாழ்பாணம், செவ்,
கீருக்கேதீஸ்வர த்திற்கு இன்று முதல் சங்குப்பிட்டி ஊடாக விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

---

## கேதீச்சரத்தில் சிவராத்திரி

ஈழத்திருநாட்டின் மேற்குக்கரையில் அமைந்துள்ள பாடல்பெற்ற திருத்தலம் தான் ''திருக்கேதீச்சரம்'' மன்னாரிலிருந்து 7 மைல் தூரத்தில் மாந்தைக் கிராமத்தில் பாலாவியின் கரையிலுள்ளது. இலங்கையின் பாடல்பெற்ற தலங்களில் முதன்மைபெற்றது திருக்கேதீச்சரம் பழைய ஆலயத்தின் புராதனசிற்பங்களையும், விக்கிரகங்களையும் கட்டிடங்களையும் இன்றும் அங்கேகாணலாம் இப்போதுள்ள நவீன ஆலயம் இந்திய சிற்பிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள வெளி மண்டபத்தில் சிவராத்திரி கலைநிகழ்ச்சிகளை ஆலய திருப்பணிச் சபையினர் ஆண்டு தோறும் நடாத்தி வருகின்றனர். இத்திருத்தலத்தைப்பற்றி திருஞானசம்பந்தசுவாமிகளும் சுந்தரமூர்த்தி நாயனரும் பதிகம் பாடிப் போற்றியுள்ளனர்.

நத்தார் படை ஞானன் பசு
வேறிந்நனை கவிழ் வாய்
மத்தம் மதயானை உரி
போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்
தொழு
பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணி
வான் திருக்கேதீச்சரத்
தானே

'அடியவர்கள் சூழ உண்மையறிவுடையவனும்இடபவாகனத்தை உடையவனும் தேன் ஒழுகும் ஊமத்தமலரையும் யானைத்தோலையும் அணிந்தவனும் மழுப்படையையுடையவனும் இறந்தவர்களுடைய எலும்பை (மாலையாக) அணிந்தவனும் பத்தியை உடைய அன்பர்களால் தொழப்படுபவனும் பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியவனுமாகிய சிவபெருமானே' என்பது மேற் கூறிய பாவின் பொருளாகும்.

திருக்கேதீச்சரத்தில் இம்முறை சிவராத்திரி மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க திருக்கேதீச்சரம் செல்லும் அடியார்கள் அவரின் அருளைப் பெறுவார்களாக.

—வி.பிரான்சிஸ்

---

பருத்திஜவுளி

## உள்நாட்டிலேயே உற்பத்தி

கோட்டை, திங்கள்
இலங்கைக்குத் தேவையான பருத்தி ஜவுளிவகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு கைத் தொழில் அமைச்சு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

## சிவராத்திரி விழா

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தில்சிவராத்திரி தினமாகிய இன்று மாலை 5-40க்கு பிரதோஷ பூசையும் உற்சவமுமாகி சிவாராத்திரியை முன்னிட்டு ஸ்ரீவைத்தீஸ்வரப் பெருமான் இடபரூபராய் வெளி வீதிவலம் வருவதுடன் தொடர்ந்து நான்குஜாமங்களிலும் முறையே இரவு 9 மணி 11 மணி 1மணி 3மணிக்கு விஷேச அபிஷேக ஆராதனைகளும் இடையிடையே பக்திப்பாடல் இன்னிசைகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுவதுடன் இரண்டாம் ஜாமப்பூஜைக்கு சுவாமி அம்பாளுக்கு சந்தனக்காப்புநடைபெறும்.

0 0 0

### உரும்பராயில்

உடும்பராய்,செவ்
உடும்பராய் ஞானவைரவ கோவில். உடும்பராய் கற்பகப்பிள்ளையார் கோவில்களில் இன்று சிறப்பாக சிவராத்திரி விழா நடைபெறவிருக்கிறது. மூன்று ஜாமப் பூசையும், கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

### கொக்குவிலில்

நாவடி,செவ்
கொக்குவில்மேற்கு ஞான பண்டித வித்தியாசாலையில் தலைமையாசிரியர் திரு. த. தருமலிங்கத்தின் தலைமையில் சிவராத்திரி விழாக் கொண்டாடப் படவுள்ளது. நாடகங்களும் வில்லுப் பாட்டும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறும்.

0 0 0

### காங்கேசன்துறையில்

காங்கேசன்துறை, செவ்
காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை நாடகக்கலா மன்றம் சிவராத்திரியை முன்னிட்டு பலகலைநிகழ்ச்சிகளை நடாத்தவிருக்கின்றனர் இரணைக்குடிசைதிறந்த வெளியரங்கில் தொழில் அதிபர் திரு. ஏ. பிரான்சிஸ் தலைமையில் இந்நிகழ்ச்சிகள் நிகழும்.

0 0 0

### மட்டுவிலில்

யாழ்ப்பாணம், செவ்
மட்டுவில் கல்லுவத்துச் சிவன்கோவிலில் சிவராத்திரி தினத்தன்று சிவராத்திரி விழா மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட விருக்கிறது, உபந்நியாசம், புராணபடனம், மேளக்கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. உதயம் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## ஓய்வுபெற்றார்

நெடுந்தீவு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் 32 வருடங்களாக தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கே. இராமநாதன் சேவையிலிருந்தும் ஓய்வுபெற்றுள்ளார். நெடுந்தீவு கிராம சபையின் தலைவராகவும் கிராம முன்னேற்றச்சங்கம், சனசமூக நிலையங்கள் போன்றவற்றில் முக்கிய அங்கத்தவராகவும் திரு. இராமநாதன் பணியாற்றியவர் நெடுந்தீவு திடீர்மரண விசாரணை அதிகாரியாக கடந்த பல வருடங்களாக சேவையுரியும் இவர் ஒரு சமூக சேவையாளன். இவரிடம் கல்விகற்ற அநேகர் பட்டதாரிகளாகவும் டாக்டர்களாகவும் எஞ்ஜினியர்களாகவும் இருக்கின்றனர். மாணவர்களை நல்வழிப் பாதையில் இட்டுச்செல்ல அயராது உழைத்துவந்த திரு. இராமநாதனின் ஓய்வு மாணவர் சமுதாயத்துக்கு பேரிழப்பாகும்.

ஒரு மாணவன்

## குளத்தில் மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த வேலாயுதர் பண்டாரி (வயது 65) என்பவர் இம்மாதம் 20-ந் திகதி யன்று குளம் ஒன்றில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். மரணவிசாரணை நடத்திய நெடுந்தீவு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. இராமநாதன் விசாரணையின் பின்பு சலசித்தம் காரணமாக மரணம் நேர்ந்தது எனத் தீர்ப்பளித்தார். இறந்தவர் கடந்த சில மாதங்களாக சித்த சுவாதீனமற்றவராக இருந்தார்.

## சிவராத்திரிப் பயன்

ஓங்கும்சி வாயநம - மந்திரம்
உச்சரிப்பாய் மனமே
நீங்கும்வி னைகளெல்லாம் - விட்டுநிலை
நின்றிடு வாய்மனமே.

நானென தென்பவற்றை - விட்டுவிட்டு
நள்ளிருட் கூத்தாடும்
ஞானப் பரம்பொருளே - எங்களது
நாதனென் றேதுதிப்பாய்.

நானே பரப்பிரம்மம் - என்றெழுந்த
நான்முகன் நாரண னும்
வானேறி மண்துளைத்தும் - சோதியினை
மட்டும் பிடித்தாரோ,

மாசியபரபக்கச் - சதுர்த்தசி
மன்னும் தினத்தினிலே
ஈசனனற் பிழம்பாய் - நின்றதனி
இரவே சிவராத் திரி.

அச்சோதித் தோற்றம்கண்டு - அரி(அ)யன்
அடிமுடி தேடிநிற்க
பச்சை நிறத்தழகி - எம்மைப்பெற்ற
பார்வதிச் சீமாட்டி.

மாயா இருள்வந்து - உயிர்களை
மண்டி வருத்துமென்று
ஓயாத் தவமிருந்தாள் - அவ்விரவில்
'ஓம்நம சிவாய' சொல்லி.

நம்பிழை ஒத்துக்கொண்டார் - மாலயன்
சங்கரனைப் பணிந்தார்
கும்பிட்டு நின்றவர்க்கு - சிவனார்
கொடுத்தார் அருட்காட்சி

(அருட்கவி சீ. வி.)

ஃ ஃ ஃ ஃ

பல்லவி
ஆடும் பரம்பொருள் அம்பிகை நேசா
ஆட்டத்துட் சோதிகாண்போம் ஆனந்தரூபா
(ஆடும்)

அனுபல்லவி
நாடிடும் நற்பொருளைத் தேடிடும் நற்பதியில்
நாயகன் நடமிட நாயகி துதித்திட (ஆடும்)

சரணம்
சிவகாமி சிவசிவ சிற்சபை நேசவாச
தவலோக சிவசக்தி சிவலிங்க தற்பரனே
பவவினை பொடிபட பார்வதி பாலராட
சிவநடமாடிய நாவருளிசைதரும்
(ஆடும்)

— சரசகலாமணி

## தமிழ்நாடு தேர்தல்களம்

# “சினிமா நடிகைக்கு இலவச நிலம்; எனக்கு மட்டும் கிடைக்கவில்லை”

# தி. மு. கழக ஆட்சிபற்றி சிதம்பரம் ஜெயராமன் மனு

( நமது சென்னை நிருபர் )

சென்னை, பெப் 22

“வருகிற இடைத் தேர்தலில் 10 கோடி ரூபா செலவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கும் அரசியல் சூதாடிகளின் கரங்களிலிருந்து நாட்டையும், நாம் பெற்ற சுதந்திரத்தையும், நல்லோர்கள் வகுத்துத்தந்த அரசியல் அமைப்புச் சட்டத்தையும், அதன் மூலம் நாம் பெற்ற உரிமைகளையும் காக்க மக்கள் அணிதிரளட்டும் என்று தியாகி கண்ணப்பர் திடலில் நடந்த மாபெரும் கூட்டத்தில் திரு. காமராஜர் பேசும்போது கூறினார்.

சுதந்திரம் அடைந்த இத்தனை ஆண்டுகளில் சமீபகாலமாக உள்ள ஊழல்போல் என்றும் இருக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி போக்குபிடிக்காது சென்னை 33 எல்லையம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த நெடலை ரமணன் 116வது வட்ட கமிட்டி துணைதலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார். இவரைத் தொடர்ந்து மற்றும் சிலர் தங்கள்ராஜினுமா கடிதத்தை சமர்ப்பிததுள்ளனர்.

தமிழ் நாட்டில் ஏகபோக ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த தி. மு. கழகத்தின் அக்கிரமஆட்சி வருகிறதேர்தலுடன் முடியப்போகிறது என்று மதுரை மாவட்ட சிவாஜி மன்ற அமைப்பாளர் திரு வி சண்முகம் நேற்று இங்கு தெரிவித்தார். நடிகர் திலகத்துடன் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு மதுரை திரும்பிய திரு சண்முகம் இவ்வாறுகூறினார்.

மதுராந்தகம் இந்து உயர் நிலைப்பள்ளியில் நடந்த கூட்டத்தில் சிவாஜி கணேசன் பேசும்போது, கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று மக்களுக்கு கஷ்டத்தையும், கவலையையும் கலக்கத்தையும் கொடுத்துவருகிறார்கள் என்று கூறினர்,

சென்னை என் எஸ் கே நகரில் சிவாஜி மன்ற தலைவர் திரு புருஷோத்தமன் மன்ற உறுப்பினர்களுடன் வந்து கொண்டிருக்கும்போது சில விஷமிகளால், பயங்கரமாக தாக்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இதுபற்றி பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

### கட்சி மாறினர்கள்

நன்னிலம் தாலுகா வண்டாம்பாலை கிராமத்தில் சுமார் 75 திராவிடக் கழகத் தோழர்கள் அக்கட்சியிலிருந்து வெளியேறி சிண்டிகேட காங்கிரஸில்சேர்ந்துள்ளனர் வண்டாம்பாலை கிராம காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு எம் எம் சம்பந்தபிள்ளை தலைமையில் அவர்கள் சிண்டிக்கேட் கட்சி உறுப்பினர்களாக சேர்ந்துகொண்டனர்.

### மாணவர்கள் பிரசாரம்

திருவண்ணாமலைத் தொகுதியில் அமைச்சர் ப உ. சண்முகத்தை எதிர்த்து போட்டியிடும் அண்ணாமலைப் பிள்ளைக்கு வடஆற்காடு மாவட்ட மாணவர்கள் தேர்தல் நிதி சேர்த்து கொடுத்தார்கள் ஸ்ரீபெரும்புதூர் பாராளுமன்ற தொகுதியில் இருந்து லோக்சபைக்கு போட்டியிடும் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் சுக்கனுக்குரோம்பேட்டையில் ஜனநயக முன்னணியினர் நேற்று தேர்தல் நிதி சேர்த்தி கொடுத்தார்கள்.

இடையில் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருந்த தன்னிலம் ஜெயராஜ் என்பவர் மீண்டும் சிண்டிகேட் காங்கிரஸில் சேர்ந்துள்ளதாக அறிவித்துள்ளார் இனிமேல் காமராஜர் தலைமையில் ஜனநாயகத்தை காப்பாற்றப் போகிறேன் என்று ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

### திருமணம் ஒத்திவைப்பு

தேர்தலை முன்னிட்டு நாளை மயிலைவன்னியர் திரு

(8-ம் பக்கம் பார்க்க)


சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினி

பொலிடோல் ஈ·605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்துவிடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.

100 சீ. சீ. (4 அவுன்ஸ்) விலை— ரூ. 5/50
250 சீ. சீ. (9 அவுன்ஸ்) விலை— ரூ. 11/-
1000 சீ. சீ. (35 அவுன்ஸ்) விலை— ரூ. 37/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்— பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.**

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.



பாவனையாளருக்கு

## ஓர் அறிவித்தல்

பொலிடோல் ஈ 605

சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினியான

பொலிடோல் ஈ 605

ஜெர்மனியைச் சேர்ந்த பேயர் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கையில் தயாரிக்கப்படுகிறது.

கடினமான தரக் கட்டுப்பாட்டின் கீழ் தயாரிக்கப்படும் பொலிடோல் ஈ 605 அலுமீனியக் கொள்கலங்களில் தற்போது கிடைப்பினும், சில கட்டுப்பாடுகளின் விளைவாக, இனிமேல் இவற்றை இறக்குமதி செய்யமுடியாது. எனவே, கையிருப்பு முடிந்ததும்

**100 சீ. சீ; 250 சீ. சீ; 1,000 சீ. சீ.**

**அலுமீனியக் கொள்கலங்களுக்குப் பதிலாக,**

**4 அவுன்ஸ், 10 அவுன்ஸ், 16 அவுன்ஸ்**

போத்தல்களில் இதை விற்பனை செய்யவிருக்கிறோம். இதனால், சிக்கன அளவில், குறைந்த விலையில், பாதுகாப்பான முறையில் பொலிடோல் ஈ 605 பாவனையாளருக்குக் கிடைக்கும்.

தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லாத பொலிடோல் ஈ 605, பேயர் வியாபாரச் சின்னத்துடனேயே விற்பனையாகும்.

துண்டுப்பிரசுரத்தில் காணும் பாதுகாப்பு விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்.

புதிய விலைகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 4 அவுன்ஸ் போத்தல் | — | ரூ. 5/- |
| 10 அவுன்ஸ் போத்தல் | — | ரூ 10/50 |
| 16 அவுன்ஸ் போத்தல் | — | ரூ. 16/50 |

எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்துப் பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பொலிடோல் ஈ 605. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்,

**ஹேக்கெம் லிமிட்டெட்**
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு—10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன ஐக்கியத்துக்குப் பின்தான் சோஷலிஸம் ஏற்படமுடியும்"

மாவிட்டபுரம், திங்கள்

"எம்நாட்டில் சோஷலிசம் ஏற்பட்டாலும் சுபீட்சமான வாழ்வை அமைக்க முடியாது. முதலில் இனங்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்பட்ட பின்தான் உண்மையான சோஷலிச ஆட்சி ஏற்படவேண்டும்."

இவ்வாறு பலாலி கொத்தியால் வைரவர் ஆலயத்துக்கு அருகாமையில் நடந்த அண்ணா விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் உடுவில் எம். பி திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

திரு. க. சின்னத்தம்பி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மறைந்த அண்ணாவுக்கு அமைச்சர் குமாரசூரியர் புகழ்மாலைசூட்டினார் யாழ்ப்பாணத்தில் புகழ்மாலை சூட்டிய அமைச்சர் இப்புகழ்மாலையை சிங்கள மக்கள் மத்தியில் கூறவேண்டும். அப்போது தான் தமிழரின் பெருமையை சிங்கள மக்கள் உணருவார்கள்.

அண்ணாவை நாம் போற்றிப் புகழ்வது அவர் ஒரு தமிழன் என்பதற்கு அல்ல, சிறந்த போராட்டம் நடாத்தி இன விடுதலைக்கு உழைத்தவரென்பதாலும் அரிய கொள்கைகளையுடையவர் என்ற காரணத்தாலும் அவரை நாம் போற்றுகிறோம். அவரின் அரிய இலட்சியங்களை நாமும் பின்பற்றி சுபிட்சமான வாழ்வை ஏற்படுத்தவேண்டும்.

நாட்டில் சோஷலிசம் ஏற்பட்டால் பிரச்னைகள் தீர்ந்து விடமாட்டாது. நாட்டில் இன ஒற்றுமை ஏற்பட்ட பின் தான் சோஷலிசம் மலரவேண்டும். அப்போதுதான் சோஷலிசம் வரும். காலம் சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் இன ஒற்றுமையின் பின்தான் சோஷலிசம் ஏற்படவேண்டும் என்ற கருத்துடன் தான் தமிழரசுக்கட்சியுடன் ஒப்பந்தம் செய்தார். இப்படியான கருத்தை அவர் கொண்டிருக்காவிட்டால் பொதுவுடைமைக் கட்சியுடன் தான் ஒப்பந்தம் செய்திருப்பார். ஆகவே அவரின் கொள்கைப்படி இனஒற்றுமையை ஏற்படுத்திய பின்தான் சோஷலிச ஆட்சி மலரவேண்டும்.

கம்யூனிஸ்ட் வடபிரதேச செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

"நான் பொதுவுடைமைவாதியாக இருந்தபோதும் அண்ணாவின் கொள்கைகளைத்தான் ஆதரிக்கிறேன். அவரின் சிறந்த கொள்கையான 'அரசியல் எதிரிகளையும் நேசி' என்ற கொள்கையை நான் பெரிதும் ஏற்று அக்கொள்கைப்படி அரசியல்வாதிகளை நண்பர்களாகக் கருதி நேசிக்கிறேன்" என்றார்.

மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. கு. தி. இராசதுரை அண்ணாவின் உருவப் படத்தை திறந்துவைக்க ஆரம்பமான இவ்விழாவில் திரு. வி. என். 'திராவிடமணி', புதுமைலோலன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினார்கள்.

# 'மறத்தை மனதிலிருந்துவிரட்ட கீதையும் பாரதமும் உதவும்'

தாவடி, திங்கள்

"மக்கள் மக்களாகவும் மனிதன் மனிதனாகவும் வாழப்பழகுதல் வேண்டும் மக்களில் மனிதனுமுண்டு மிருகமும் உண்டு மனிதன் பேயாகவும் மாறலாம் சிவமாகவும் வரலாம். தேவர்களும் மக்களாகப் பிறந்துதான் சிவத்துடன் கலக்கலாம். மக்களாகப் பிறப்பது அரிதினும் அரிது எத்தனை காலம்தான் வாழ்ந்தோமானாலும் என்றோ ஒருநாள் மடிவது திண்ணம் மனிதன் மனிதனாக வாழவழிவகுக்கும் சிறந்த நூல் மகாபாரதம்.

அறநெறிகளைப் பற்றிவிரிவாக மக்கள் உணர்ந்து உய்யும் வகையில் அதில் அருளிச்செய்யப்பட்டுள்ளது ஸ்ரீமத் பகவத் கீதையையும் நாம் கற்றுணருதல்வேண்டும். மக்கள் இவைசிந்தையையூட்டும் அறநூல்களைத் தெரிந்தெடுத்துக் கற்றும் பயன்பெறமுற்படுதல்வேண்டும்.

இவ்வாறு முதலியார் திரு. செ. முத்துத்தம்பி தாவடி சைவஇளைஞர் மன்றம் நடாத்திய மகாபாரதப்படன விரிவுரைப் பூர்த்தி விழாவில் கலந்துரையாற்றியபோது கூறினார்.

தாவடி மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடந்த இவ்வைபவத்திற்கு திரு. ஏ. ரி. ஏ. கமலநாதன் தலைமை தாங்கினார். வைபவத்தில் உரையாற்றிய பண்டிதர் திரு. செ. சிவப்பிரகாசம் கூறியதாவது:

"சிலப்பதிகாரத்திலே கண்ணகியை எப்படிக்கற்பிற்கு இலக்கணமாகப் பேசப்படுகிறாரோ அதே போன்று மகாபாரதத்தில் பாஞ்சாலி பேசப்படுகிறாள். தமிழ்ப் பெண்கள் பாரதத்தைப் படித்தல் வேண்டும். கற்பைக்காத்த கண்ணகியின் பெரும் புகழையறியவேண்டும். மகாபாரதமும், இராமாயணமும் வைஷ்ணவர்களின் இரண்டு கண்களைப் போன்றவை.

தந்தைக்கு மைந்தன்எப்படிப் பணிந்து நடக்கவேண்டும், அண்ணனுக்குத் தம்பி எப்படி அடங்கிநடக்கவேண்டும் பெண்களுடன் எப்படிப் பரிவுடன் பழகிக் கொள்ளுதல் வேண்டும், குருவுடன் எப்படியான தன்மையில் மாணவன் பழகும்பான்மை வேண்டும் என்றெல்லாம் விரிவாக விளக்கவல்லது. "ஸ்ரீமத் பகவத் கீதை" ஸ்ரீ மகாபாரதம் என்னும் நூல்களாகும். அறநூல்களாம் இவற்றைக் கற்றால் மறம் இதயத்தில் சிறிதளவும் இருக்கமாட்டாது.

ஐந்தாங்குரவர் எனக் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானவர்கள் மகாபாரதத்திற்கு உரையெழுதியிருப்பாரேயானால் நாம் புண்ணியவான்களாக இருந்திருப்போம். நாமும்அவர் பணியில்புராண படனங்களையும் நடாத்தல் வேண்டும் சைவஇளைஞர் மன்றம் புராணபடனங்களையும் நடாத்தி பணிசெய்வதாகும் என இறைவனை வேண்டுகிறேன்.

ஆறுமாதகாலமாகத் தொடர்ந்து புராணபடன விரிவுரையை நடாத்துவதற்குப் பணிபுரிந்த இளைப்பாறிய வங்கிப் பிரதமலிகிதர் திரு. சின்னத்துரையையும் சைவ இளைஞர் மன்றம் பாராட்டியது அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

## ரூ.1100 அபராதம்

மாவிட்டபுரம், திங்கள்

வடிசாராயம் வடித்தவர்களுக்கு மல்லாகம் நீதிபதி 1100ரூபா அபராதம் விதித்தார். காங்கேசன் துறை பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நிலையப் பொறுப்பதிகாரி ஜேக்கப் தலைமையில் வி. செல்லையா, பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய கோஷ்டி வசாவிளான் குட்டியப்புலத்தில் உள்ள வடிசாராய குதம் ஒன்றை முற்றுகையிட்டனர். சாராயம் வடித்துக்கொண்டிருந்த சமயம் மாதன் கணபதி, கணபதி சுப்பிரமணியம் ஆகியோரைக் கைதுசெய்தவர் அங்கிருந்து பெருந்தொகையான வடிசாராயமும், உபகரணங்களும் கோடாவும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

பிரஸ்தாப நபர்களை பொலிசார் மல்லாகம் நீதிபதி எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்தனர். இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் இருவருக்கும் 1100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதேயிடத்தில் 7கலன் வடி சாராயத்தை சைக்கிளில் வீதியால் கொண்டுசென்ற சமயம் மாதன் மார்க்கண்டு என்பவரையும் பொலிசார் கைதுசெய்து மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்த சமயம் 300 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## ஆசிரிய சங்கக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்

நாவலப்பிட்டி, திங்கள்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்க நாவலப்பிட்டிக் கிளை திரு. முத்தையா தலைமையில் நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் கூடிய நிர்வாக சபைக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்:

ஆண்டுதோறும் பாடசாலையில் அதிகரிக்கும்மாணவர்களுடைய தொகைக்கு ஏற்ப ஆசிரியர்களுடைய தொகையையும் கட்டிட வசதியையும் பெருக்க வேண்டும்.

ஆசிரியர்களின் காலியிடங்களை உடன் நிரப்ப வேண்டும் எனக் கல்வி அமைச்சரைக் கோருவது. மாணவ கோட்டாமுறையை நீக்கி திறமைக்கு முக்கியம் கொடுக்க வேண்டும்.

சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறையும் வேறு சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் அதிகமாக இருப்பதையும் சமப்படுத்த வேண்டும்.

## சுற்றுப்போட்டி

மாவிட்டபுரம், திங்கள்

யாழ் மாவட்டத்தில் முதல் தடவையாக 'செஸ்' சுற்றுப்போட்டி ஒன்று நடாத்தப்படவிருக்கிறது. இச்சுற்றுப்போட்டியை [illegible] தயா இளைஞர் மன்றம் நடாத்துகிறது.

## பிரதேச அபிவிருத்திக்கு ஆட்சிமன்ற உறுப்பினர்களின் ஆலோசனை

காலி, திங்கள்

புதிய புனர் அமைப்பின் மூலம் 15000 பேருக்கு வேலைவாய்ப்பு வசதிசெய்யப்பட்டுள்ளது. இப்புதிய புனர்அமைப்பு தொழிலாளர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்கக்கூடியது. பிரதேசவாரியாக அமைக்கப்படும், பொறியியல் பிரிவுகளுக்கு அப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களின் ஆலோசனையும் பெற்றுக்கொள்ளப்படும்.

இவ்வாறு புதிய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தை திறந்துவைத்துப் பேசிய நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர்தொடர்ந்து பேசியதாவது: குறுகிய காலத்திற்குள் நாட்டை விரைவாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கைஆகும். இவ்வபிவிருத்தித்திட்டங்களுக்குச் செலவுசெய்யும் மக்களின் பணத்தை விரயம் செய்யும் உத்தியோகஸ்தர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வுத்தியோகஸ்தர்களைக் காப்பாற்றவருகின்றவர்களின் சிபாரிசுகள் கவனிக்கப்படமாட்டாது.

இங்கு நிறுவப்பட்டுள்ள பொறியியல் பிரிவு இந்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள மூன்றாவதுஆகும். இப்பிரிவு ஒரு குறுகிய பிரதேசத்தை உள்ளடக்காது பரந்த பிரதேசத்தை அடக்கியதாகும். நாட்டில் உள்ள சகல வேலைப்பகுதியையும் ஒருமுகப்படுத்தி நாட்டின் பொதுப்பணி வேலையைத் துரிதப்படுத்த அரசாங்கம் எண்ணி உள்ளது. இந்த வருடம் அமைச்சுக்கு ஒதுக்கிய நிதியை திட்டங்களுக்கு பூரணமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளேன்.

புதிதாக புனர் அமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ள பிரதேச பொறியியல் பிரிவுகள் மூலம் தேவையான உபகரணங்கள் திட்டங்களுக்கு வழங்கப்படும். திட்டங்கள் உபகரணங்கள் இல்லாமல் தடைப்படுவது நீக்கப்படும் என்றார்.

மற்றும் செனட்டர் விமல குலசூரியா, மீன்பிடி மந்திரி ஜோர்ஜ் ராஜபக்ச, தோட்டத்தொழில் அமைச்சின் பாராளுமன்றச் செயலாளர் திரு. அல்பேட் காரியவாசகம், காலி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி டபிள்யூ. தகநாயக்கா ஆகியோரும் பேசினர்.

## உப்பள அபிவிருத்தி குழு வருகை

அரியாலை, திங்கள்

ஆனையிறவு, செம்மணி உப்பளங்களை நவீன முறையில் அபிவிருத்தி செய்வது பற்றிய பரிசிலனை செய்ய உப்புக் கூட்டுத்தாபன டைரக்டர்கள் வருகிற வாரம் உப்பளங்களுக்கு விஜயம் செய்வார்கள் எனத் தெரிய வருகிறது.

## பொது நிர்வாகசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்

கடந்த செவ்வாய்க்கிழமை கோண்டாவில்-கிழக்கு ஸ்ரீநாராயண கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும், புதிய அங்கத்தவர் தெரிவும் மேற்படி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

திரு சு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருவாளர்கள் நா. கனகையா, டாக்டர் எம் ஐ பூபாலசிங்கம், ப. சின்னத்துரை, கா. தளையசிங்கம், கிருஷ்ணசாமி, இ. நடேசன் ஆகியோர் உரையாற்றினர். (குவிம)

## அடியார்களுக்கு வசதிகள்

திருக்கேதீஸ்வரம், செவ்

ஈழத்திலே பாடல்பெற்ற தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தென்பால், அம்மன் வாயிலினின்றும் பாலாவிபுனித தீர்த்தத்திற்குச் செல்லும் பாதையில் மேலைத்திசையில் அமைந்துள்ள மகா சிவராத்திரி மடத்தில், அம்மடத்தின் பரிபாலன சபையாரல் மகாசிவராத்திரியைமுன்னிட்டு ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு சிவராத்திரி தினத்தன்றும் மறுநாளும் அன்னமிட்டும், நீராகாரம் வழங்கப்பட்டும் வருகின்றது

கடந்தவருடங்களைவிட இவ்வருடம் அடியார்களின்எண்ணிக்கை கூடுதலாக இருக்குமென எதிர்பார்த்து மகா சிவராத்திரி மடபரிபாலன் சபையினர் அடியார்களின வசதியை முன்னிட்டு விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

## இன்றைய பலன்

மேஷம்- அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்திலிருந்து தாக்குதல் உருவாகும். விழிப்புடன் இருக்கவும்.

ரிஷபம்-பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். வெளியிடத் தொடர்புகள் பெருகும். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு.

மிதுனம்- உள்ளம் உவகையால் துள்ளும், உறவு முறைகளில் இறுக்கமேற்படும். அறவழியில் நாட்டமுண்டு.

கடகம்- அசுரவேகத்தில் செயலாற்றவேண்டும்என்று விரும்புவீர்கள். ஆனால் சம்பவங்கள் ஆமைவேகத்தில் நகரும்.

சிம்மம்- வாழ்க்கை இன்று நிறைந்ததாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். இன்று தித்திப்பான தினம்.

கன்னி- முயற்சியால் முட்டுக்கட்டை தென்படும். மற்றவர்களிடம் குறை கேட்க நேரிடும். இன்று துயர்படிந்த தினம்.

துலாம்- வியாபாரத் துறையில் முன்னேற்றம் தென்படுகின்றது. நினைத்ததைச் சாதிப்பதில் வெற்றியடைவீர்கள்.

விருட்சிகம்- அதிர்ஷ்டகரமான தினம். சிலர் வாழ்க்கையில் திடீர் வரவுகளுக்கு இடமுண்டு. நண்பர்கள் மூலம் விருந்தும் உண்டு.

தனுசு- பலவித சிந்தனைகளால் தாக்கப்படுவீர்கள். உடல்நலனும் சிறிது பாதிக்கப்படலாம். திரைமறைவில் மோசடி நடக்கும்,

மகரம்- கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம். எதிலும் ஏமாற்றம் தென்படும்.

கும்பம்- கனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. இனிய பேச்சின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள்.

மீனம்- அன்னியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடமொன்றுக்கு

# விசாவரி மூலம் ரூ. 30 லட்சம்

# புதியசட்டம நிறைவேறியது

கொழும்பு, ஞாயிறு

**தற்காலிக வாசகால அனுமதிப்பத்திரம் வைத்திருப் போர் மீதான புதிய வரிச்சட்டத்தின் மூலம் வருட மொன்றுக்கு 30 லட்சம் ரூபாய் கிடைக்கும்.**

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் இந்தத் தகவலை வெளியிட்டார். தற்கால வாசகால பர்மிட் வைத்திருப்போர் மீதான புதிய வரிச் சட்ட மூலம் இன்று ஆட்சிமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

மூன்று மாத காலத்துக்கோ, அதற்குமேற்பட்ட காலத்துக்கோ வாசகால 'பர்மிட்' வைத்திருக்கும் இலங்கைரல்லாதவர்களுக்கு வருடமொன்றுக்கு 500 ரூபாய் வரி அறவிடுவதற்கு இந்த சட்ட மூலம் வழி வகுக்கிறது.

1960ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டுவரை இந்த வரி அறவிடப்பட்டுவந்துள்ளதென்றும், இதன் மூலம் அப்போது 1 கோடி ரூபாய் கிடைத்ததென்றும், ஆனால் கடந்தகால அரசாங்கம் இதனை அறவிடாது நீக்கிவிட்டதென்றும் பிரதமர் பேசுகையில் தெரிவித்தார்.

தற்காலிக வாசகால பர்மிட் வைத்திருப்போர் இலவசமருத்துவம், கல்வி ஆகியனவற்றை அனுபவித்து வருகிறார்களென்றும்; இவர்கள் மீது வரி அறவிடப்படுவது நியாயமானதென்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

குருமார்களுக்கு இந்த விதியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமென்றும் பிரதமர் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

### அறிக்கை

இன்று ஆட்சிமன்றத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா சிங்கப்பூரில் நடைபெற்ற சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டவை பற்றிய அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தார்:

**யாழ்ப்பாணக் கல்லூரிகளிலிருந்து**

# வர்த்தகப்பட்டம்பெற 17 மாணவர் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

வித்தியோதய பல்கலைக் கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வர்த்தகப் பட்டதாரிகள் வகுப்பிற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்லூரியிலிருந்து 17 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரி: என். முகமதுஅலி, எம். எம். எம். சபுன்றுதீன், எஸ். அருளானந்தநாதன், எஸ். ரகுலேந்திரன், ரி. சிறிசெல்வராசா, ஞானச்சந்திரன், சிவராசா, குகனேந்திரன், என். புலேந்திரன். கொக்குவில் இந்துக்கல்லூரி: க. தேவராஜா, கு. வன்னியசிங்கம், க. வேலாயுதம், கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம்: எஸ். மனோன்மணி, எம். சி. சமரக்கோன், ஐ. கோபாலகிருஷ்ணன், வி. தங்கராஜா, ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி: க. சுந்தரலிங்கம்.

இவர்களுக்கான வகுப்புக்கள் இம்மாதம் 25-ந் திகதி ஆரம்பமாகிறது.

## விளக்கினால் விபத்து: 38 வயதுப்பெண் பலி

யாழ்ப்பாணம், திங்கள்

தகரவிளக்கு தட்டுப்பட்டதால், ஏற்பட்ட தீ விபத்தினால் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நாகராசா பெண் நேசம்மா (வயது 38) மரணமானார்.

சேலையில் தீப்பிடித்ததைத் தொடர்ந்து எரிகாயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் மரணமானதாக விசாரணையில் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம், விசாரணையின் பின் விபத்தினால் ஏற்பட்ட மரணமென்று தீர்ப்பளித்தார்.

(கா. நி)

## 'வடக்கு பல்கலைக்கழகத்தில் 3மொழி போதனைவேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் அமைப்பது சம்பந்தமாக யாழ். நுண்கலைக் கழகம் மகஜர்ஒன்றை தபால் அமைச்சர் திரு செ. குமாரசூரியருக்கு அனுப்பி வைத்துள்ளது.

வடபகுதியில் பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதைப் பாராட்டி, இது அரசாங்கத்தின் சோஷலிஸத் திட்டதை, வெளிப்படையாகக்காட்டுகிறது என்று நுண்கலைக் கழகம் தனதுமகஜரில் குறிப்பிட்டுள்ளது.

வடபகுதியில் அமையவிருக்கும் பல்கலைக் கழகத்தில் பின்வருவன இடம்பெறவேண்டும் என்று இவர்கள் கோரியுள்ளனர்.

" உத்தேச பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட ஒரு மொழியில் மட்டுமே கல்வி போதிக்கப்படக்கூடாது தேசிய மொழியான சிங்களம், பிராந்திய மொழியான தமிழ், சர்வதேச மொழியான ஆங்கிலம் ஆகியனவற்றில் இங்கு கல்விகற்கவசதி செய்ய வேண்டும். இங்கு சமஸ்கிருதமும் போதிக்கப்படவேண்டும். இது கர்நாடக சங்கீதம் போன்ற நுண்கலைகளும் சுதேச வைத்தியக் கல்விக்கும் அதிமுக்கியமானது. எனவே சமஸ்கிருதமும் இங்கு போதிக்கப்படவேண்டும்.

சகல பிரிவுகளும் இந்தப் பல்கலைக் கழகத்தில் அமையலாம். வைத்தியம், விஞ்ஞானம், பொறியியல், கலை மற்றும் தாதிமார் பயிற்சி போன்ற சகல பிரிவுகளையும் இங்கேயே நிறுவலாம். சங்கீதம், நடனம் சுதேச நாடகங்கள், போன்ற நுண்கலைகளை இந்தப் பல்கலைக் கழகம் மூலமாகப் பேணிக் காக்கமுடியும். இப்போது இராமநாதன் மியூசிக் அக்கடமி இத்தொண்டினைப் புரிந்துவருகிறது,

— —

**மன்னார் தேர்தல் வழக்கு**

## தீர்ப்பை எதிர்த்து அப்பீல்

மன்னார், ஞாயிறு

மன்னார் தேர்தல்ஆட்சேப வழக்கு தீர்ப்பை எதிர்த்து மனுதாரரான திரு. எஸ். அப்துல்ரஹீம் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்துள்ளார்.

மன்னார் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினராக தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. வி. ஏ. அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து திரு. எஸ். அப்துல்ரஹீமினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதியரசர் திரு. வி. ரி. தாமோதரம், செலவுடன் தள்ளுபடி செய்திருந்தார்.

### தகனம்

கல்கத்தா, பெப். 21

இந்திய போர்வார்ட் புளக் தலைவர் திரு. ஹேமந்த குமார் பாசுவின் சடலம் இன்று கல்கத்தாவில் தகனம்செய்யப்பட்டது. இவர் குத்திக் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

———

### சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கடையிற் சுவாமி கோவிலில் நாளை மகா சிவராத்திரிவிழா நடைபெறும்.

அபிடேக ஆராதனையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் கதாப்பிரசங்கம், கவியரங்கம், மெல்லிசை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## சினிமா நடிகைக்கு ...

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

மண கூட்டத்தில் திரு. காமராஜர் தலைமையில் நடைபெறவிருந்த திருமண விழா மார்ச்மாதம் 14-ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக ஆயிரம் விளக்கு காங்கிரஸ் ஊழியர் திரு. எம். பி. திருஞனம் தெரிவித்தார்.

முதலமைச்சர் கருணாநிதியின் மைத்துனரும் சங்கீதக் கல்லூரி முதல்வருமான சிதம்பரம் ஜெயராமனுக்கு தமிழ்நாடு அரசாங்கம் பட்டா நிலம் வழங்கி பின்னர் ஒரு உத்தரவு மூலம் திரும்பப் பெற்றிருப்பதை எதிர்த்து திரு. ஜெயராமன் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபமனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் தன்னைவிட வசதிபடைத்தவர்களுக்கு புறம் போக்கு பட்டா நிலம் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். சைதாப்பேட்டை தாலுகாவில் சினிமா நடிகை சந்திரகாந்தாவுக்கு இலவச புறம்போக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது

**பறங்கிமலையில் பிரசாரம்**

பறங்கிமலை தொகுதியில் சிண்டிகேட் அபேட்சகராக போட்டியிடும் ரகுபதியையும் பாராளுமன்ற அபேட்சகர் கக்கனையு ஆதரித்து பல்லாவரப் பஸ் நிலைய மைதானத்தில் மாணவர்கள் கூட்டமொன்று நடந்தது. பல்வேறு கல்லூரிகளையும் சேர்ந்த 500 மாணவர்கள் கலந்துகொண்டனர். அக் கூட்டத்தில் வீசப்பட்ட 3 சுற்கள் ஏலத்தில்விடப்பட்ட போது 125 ரூபாவிற்கு ஏலமிடப்பட்டது கூட்டத்தில் உண்டியல் மூலம் 150 ரூபா சேர்க்கப்பட்டது.

# பாடசாலைகள் மூடப்பட்டதற்கு ஆசிரியர்களே காரணம்

## இடமாற்றம் பெற்றவர்கள் லீவில் என்கிறார் வவனியா வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், செவ்வாய்

வவனியா மாவட்டத்தில் ஓரிரு ஆசிரியர்களுடன் இயங்கும் பாடசாலைகளுக்கு அண்மையில் நடைபெற்ற இடமாற்றத்தின்போது ஆசிரியர்களை அனுப்பியிருந்தேன். பல ஆசிரியர்களின் குறிப்பிட்ட பாடசாலைகளுக்குச் சென்று தங்களது கடமையைப் பொறுப்பேற்காமல் லீவில் நிற்கிறார்கள். இதனாலேயே இங்கு பல பாடசாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வவனியா சிரேஷ்ட வித்தியாதிபதி திரு. தில்லைநாதன் மாணிக்கவாசகர் நேற்றுத் தெரிவித்தார். வவனியா மாவட்டத்தில் ஆசிரியர் இடமாற்றத் [illegible] காரணமாக [illegible] பட்டிருப்பதாக நேற்று முன்தினம் 'ஈழநாடு' முன்பக்கச் செய்தி வெளியிட்டிருந்தது. இச் செய்தி சம்பந்தமாக வவனியா கல்விஅதிபதி மேலும் கூறியதாவது:

இடமாற்றம் காரணமாக பாடசாலைகள் மூடப்படவில்லை. இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் தங்கள் கடமையை ஏற்காததினாலேயே பாடசாலைகள் மூடப்படவேண்டி ஏற்பட்டது. வவனியாவில் தண்டுவான், ஊஞ்சல்கண்டி, குளவிசுட்டான் போன்ற பாடசாலைகளுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்ட பல ஆசிரியர்கள் இன்றுவரை லீவில் நிற்கிறார்கள். ஆசிரியர்கள சேவை மனப்பான்மையுடன் கடமைபுரிய வேண்டும் இடமாற்றங்களை ரத்துச்செய்வதற்காக ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்குப் பின்னால் திரியக்கூடாது. அபிவிருத்தியடைந்துவரும் பகுதிகளில் ஆசிரியர்கள் கடமையுணர்ச்சியுடன் பணியாற்ற முன்வரவேண்டும் என்று ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியர்களின் இவ்வித நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுவது மாணவர்களே. இதைக் கருத்திற்கொண்டு, இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் அந்தந்த இடங்களில் பணிபுரியத் தயாராயிருக்க வேண்டும்' என்றார்

சில பாடசாலைகளில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்கள் மிகவிரைவில் இயங்கமுடியாமல் இருக்கும் பாடசாலைகளுக்கு இடமாற்றஞ்செய்யப்படவிருப்பதாகவும் திரு. மாணிக்கவாசகர் கூறினார்.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org